# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2025

## வளர்தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL
4 AV DES PRIMEVERES
77290 MITRY MORY
WWW.tamiledc.com

TEDC -FR
TEDC -FR

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 25 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |


TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வரும் வினாவெழுத்து

அ) யா ☐ ஆ) ஆ ☐
இ) ஏ ☐ ஈ ) ஓ ☐

2. தென்றல் வரவு பற்றிக் கூறும் நூல்

அ) பரிபாடல் ☐ ஆ) அழகின் சிரிப்பு ☐
இ) ஆத்திசூடி ☐ ஈ ) ஆசியசோதி ☐

3. நறை என்பதன் சொற்பொருள்

அ) பால் ☐ ஆ) தேன் ☐
இ) பழம் ☐ ஈ ) நெய் ☐

4. ஆரியரின் மேலாண்மையின் கீழ் வாழவிரும்பாத மக்கள் குடியேறிய இடம்

அ) சுவாமிமலை ☐ ஆ) பறம்புமலை ☐
இ) வேங்கடமலை ☐ ஈ ) பொதிகைமலை ☐

5. 75 ஆவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பவளவிழா ☐ ஆ) பொன்விழா ☐
இ) வெள்ளிவிழா ☐ ஈ ) வைரவிழா ☐

6. இணைமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) கூனிக்குறுகி ☐ ஆ) மேலேமேலே ☐
இ) ஓடிஓடி ☐ ஈ ) பேரும்புகழும் ☐


TEDC -FR

TEDC -FR TEDC -FR

7. தே என்ற எழுத்தின் மாத்திரை

அ) 1 ☐ ஆ) 1/ 2 ☐

இ) 2 ☐ ஈ) 11/2 ☐

8. பூங்கொடி என்பதைப் பிரித்து எழுதினால்

அ) பூங் + கொடி ☐ ஆ) பூங்க் + கொடி ☐

இ) பூம் + கொடி ☐ ஈ) பூ + கொடி ☐

9. வாளால் வெட்டினான். இச் சொல்லியம்

அ) 3 ஆம் வேற்றுமை ☐ ஆ) 5 ஆம் வேற்றுமை ☐

இ) 2 ஆம் வேற்றுமை ☐ ஈ) 7 ஆம் வேற்றுமை ☐

10. நாலறிவினை உடைய உயிரி

அ) நத்தை ☐ ஆ) நண்டு ☐

இ) எறும்பு ☐ ஈ) கறையான் ☐

11. தமிழ் ———— மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது.

அ) திராவிட ☐ ஆ) சீன ☐

இ) சுமேரிய ☐ ஈ) சித்திய ☐

12. தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர்

அ) மறைமலையடிகள் ☐ ஆ) தனிநாயகம் அடிகள் ☐

இ) வீரமாமுனிவர் ☐ ஈ) விபுலாநந்த அடிகள் ☐

13. ஊக்கப்படுத்தல் என்ற கருத்தை விளக்கும் மரபுத்தொடர்

அ) ஆறப்போடுதல் ☐ ஆ) கைவிரித்தல் ☐

இ) உச்சிகுளிருதல் ☐ ஈ) தட்டிக்கொடுத்தல் ☐



TEDC -FR

TEDC -FR TEDC -FR

14. கிழக்கிலிருந்து வீசும் காற்று

அ) கொண்டல் ☐ ஆ) கோடை ☐

இ) தென்றல் ☐ ஈ) வாடை ☐

15. தமிழர் வாழ்ந்த ———————— என்னும் ஊர் இன்று சேருவெல என அரசினால் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அ) கந்தளாய் ☐ ஆ) நீலாப்பளை ☐

இ) கல்லாறு ☐ ஈ) அரிப்பு ☐

16. மொத்த வன்னி மக்களும் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்ட ஆண்டு

அ) 2004 ☐ ஆ) 1977 ☐

இ) 1995 ☐ ஈ) 2009 ☐

17. வெம்மை என்பதன் எதிர்ச்சொல்

அ) மறுமை ☐ ஆ) தண்மை ☐

இ) வெண்மை ☐ ஈ) உண்மை ☐

18. பசும்பொன்னைக் கூத்தருக்கு வழங்கிக் கடலாடுவிழா எடுத்த மன்னன்

அ) சேரலாதன் ☐ ஆ) இராசசிம்மன் ☐

இ) நெடியோன் ☐ ஈ) குலோத்துங்கன் ☐

19. ஐம்படைத்தாலியில் இடம்பெறும் போர்க்கருவிகளில் ஒன்று

அ) சிப்பி ☐ ஆ) வில் ☐

இ) அம்பு ☐ ஈ) முத்து ☐



TEDC -FR

TEDC -FR TEDC -FR

20. த், ட், ற் போன்றன

அ) எதிர்கால இடைநிலைகள் ☐

ஆ) வருங்கால இடைநிலைகள் ☐

இ) நிகழ்கால இடைநிலைகள் ☐

ஈ ) இறந்தகால இடைநிலைகள் ☐

21. மாணவர்கள் மகிழ்ச்சியாகப் பாடுகின்றனர். இச் சொல்லியத்தின் தோன்றா உறுப்பு

அ) செயப்படுபொருள் ☐ ஆ) பயனிலை ☐

இ) எழுவாய் ☐ ஈ ) அடைமொழி ☐

22. கடலறிவு என்ற உவமையணியில் இடம்பெற்றுள்ள உவமானம்

அ) போன்ற ☐ ஆ) அறிவு ☐

இ) கடல் ☐ ஈ ) பொதுத்தன்மை ☐

23. வள்ளுவரின் வழியிலே கடந்த நூற்றாண்டில் ஆரியச் சதியினைச் சாடியவர்

அ) ஔவையார் ☐ ஆ) கபிலர் ☐

இ) கனகசுப்புரத்தினம் ☐ ஈ ) பரணர் ☐

24. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள்

அ) 133 ☐ ஆ) 1130 ☐

இ) 10 ☐ ஈ ) 33 ☐

25. பல்லி சொல்லும். அது போல வண்டு

அ) கூவும் ☐ ஆ) பேசும் ☐

இ) கத்தும் ☐ ஈ ) முரலும் ☐

புள்ளிகள் 25



TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஓர் இனத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பினையும் அம்மக்கள் வாழ்ந்த இடம், பயன்படுத்திய மொழி, அவர்களின் கலை, பண்பாட்டுக்கூறுகள் போன்றவற்றின் ஊடாக அறிந்துகொள்ள முடியும். ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிறந்த நாகரிக வாழ்வை வாழ்ந்தவர்கள் தமிழர். கி.மு.இரண்டாம் நூற்றாண்டில் இருந்தே தமிழில் இலக்கியங்கள் வெளிவந்துள்ளன. உலகின் தொன்மையான மொழிகளில் கிரேக்கம், சீனம், தமிழ் ஆகிய மொழிகள் இன்றளவும் பேச்சு வழக்கில் உள்ளன. இவற்றுள் காலத்திற்கேற்ற மாற்றங்களைத் தழுவிக் கொண்டு பேச்சு, எழுத்து என்னும் இரு வழக்கிலும் இன்றும் மிகச்சிறந்து விளங்கும் ஒரு மொழியாகத் தமிழ்மொழி திகழ்கின்றது. மாந்த வாழ்வின் சிறப்பியல்பாக உள்ள மொழியைக் கொண்டு இலக்கியம் விளைகிறது. உயர்ந்த கற்பனை, விழுமிய உணர்ச்சி, அழகிய வடிவமைப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்த இலக்கியங்கள் தமிழில் நிறைந்து காணப்படுகின்றன. பண்டைக்காலத்தில் வாழ்ந்த தமிழ்ப்புலவர்கள் என்றும் அழியாத தமிழ் இலக்கியங்களில் பல நற்கருத்துகளைக் கூறியுள்ளனர். தமிழிலுள்ள இலக்கியங்களுள் மிகவும் பழமையானவை கழக இலக்கியங்கள் ஆகும். கழக இலக்கியங்களில் முதலில் கிடைத்த நூல் தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல் ஆகும். கழக இலக்கியங்களில் உள்ள பாடல்கள் பழந்தமிழகத்தின் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கின்றன.


TEDC -FR

TEDC -FR
TEDC -FR

1. உலகின் தொன்மையான மொழிகளில் இன்றளவும் பேச்சு வழக்கில் உள்ள மொழிகள் எவை?

2. ஓர் இனத்தின் தொன்மையையும் வரலாற்றுச் சிறப்பினையும் எவற்றின் ஊடாக அறிந்து கொள்ள முடியும்?

3. எவை பழந்தமிழகத்தின் வரலாற்றுக் களஞ்சியமாகத் திகழ்கின்றன?

4. எவற்றை அடிப்படையாகக் கொண்டமைந்த இலக்கியங்கள் தமிழில் நிறைந்து காணப்படுகின்றன?

5. கழக இலக்கியங்களில் முதலில் கிடைத்த இலக்கண நூல் எது?

புள்ளிகள் 10


TEDC -FR

TEDC -FR TEDC -FR

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. 'கோளொத்த சிறைவைத்தாண்ட கொற்றவன்' என இராமாயணத்தில் கம்பர் யாரைக் குறிப்பிடுகின்றார்?

_______________________________________________

2. கூடல் என அழைக்கப்படும் நகரம் எது?

_______________________________________________

3. ஆரியம் ஊடுருவிய தமிழ்மக்களின் வாழ்வியற் கூறுகளில் இரண்டைத் தருக.

_______________________________________________

_______________________________________________

4. கவிஞர் தாமரைக்கண்ணனின் ஏக்கம் என்ன?

_______________________________________________

5. விசயன் இலங்கை வருவதற்கு முன் வடக்கிலும் தெற்கிலும் வாழ்ந்தவர்கள் யாவர்?

_______________________________________________

6. 'அணுவைச் சதகூறிட்ட கோணிலும் உள்ளான்' இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

_______________________________________________

7. எழுவரை வென்ற இளவலின் பெயர் என்ன?

_______________________________________________

புள்ளிகள் 10



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**4) பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**

1



2. உடல் நலத்தைப் பேணிடுவோம்
ஊட்டமுள்ள உணவை உண்டிடுவோம்

புள்ளிகள் 10



TEDC -FR

5) அ) பந்தியை வாசித்து, இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

காரிருள் சூழ்ந்தது. பெருங்காற்று வீசியது. தென்னை, பனை, போன்ற மரங்கள் சுழன்று ஆடின. வீசிய காற்றினால் பழுத்த தேங்காய்கள் நிலத்தில் வீழ்ந்தன. அவ்வேளை இடியோடு தொடங்கிய பெருமழை விடாது பெய்தது. பெய்த மழையினால் வண்டு மொய்த்த மலர்கள் வெள்ளத்தில் மிதந்தன. குளங்கள் நிரம்பி வழிந்தன. வெள்ளம் கங்குகரை இன்றி வாய்க்காலில் பாய்ந்து ஓடியது. குளத்தில் இருந்த உறுமீன்கள் மகிழ்வில் துள்ளித்துள்ளி விளையாடின. அவ்வேளை பறவை இனங்கள் கூடுகளில் அடைந்து கிடந்தன. இக்காட்சியைக் கண்டு நான் மகிழ்ந்தேன்.

1. உரிச்சொல் ஒன்று தருக.

_______________________________________________

2. இலக்கணப்போலி ஒன்று எழுதுக.

_______________________________________________

3. இணைமொழிக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

_______________________________________________

4. காரணப்பெயர் ஒன்று தருக.

_______________________________________________

5. மென்றொடர்க் குற்றியலுகரம் ஒன்று எழுதுக.

_______________________________________________

6. ஏழாம் வேற்றுமை உருபு ஏற்ற சொல் ஒன்று தருக.

_______________________________________________

TEDC -FR TEDC -FR

7. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________

8. தேங்காய் என்ற சொல்லைப் பிரித்து எழுதுக.

______________________________

9. தன்மைப் பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________

10. அடுக்குத்தொடர் ஒன்று எழுதுக.

______________________________

புள்ளிகள் 10

ஆ) 1. வேற்றுமைகள் எத்தனை வகைப்படும்?

______________________________

2. எழுவாய் வேற்றுமை என அழைக்கப்படும் வேற்றுமை எது?

______________________________

புள்ளிகள் 02

2. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

1. வினைத்தொகை ______________________________
2. பண்புத்தொகை ______________________________
3. உம்மைத்தொகை ______________________________

புள்ளிகள் 03



TEDC -FR

TEDC -FR TEDC -FR

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

பாடின்றிப் கையில்

தூரத்துத் முயலுக்கு

வயிறும்

மூன்று பட்டமில்லை தாயும் ஆபத்துக்குதவாது

கால்

வேறு நெய்க்கலையாதே வெண்ணெயிருக்க

வாயும் பிள்ளையுமானாலும் தண்ணீர்

இருக்க தான்பிடித்த

1. விடாப்பிடி.

________________________________________

2. உறவு வேறு தேவை வேறு.

________________________________________

3. தன்னிடம் இருப்பதைத் தானறியாமை.

________________________________________

4. கைக்கெட்டாதது பயனற்றது.

________________________________________

5. முயற்சியின்றி உயர்ச்சி இல்லை.

________________________________________

புள்ளிகள் 05



TEDC -FR

TEDC -FR
TEDC -FR

**7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| பரந்த | ஏரி | பறந்த | மூலை | ஏறி | மூளை |
|---|---|---|---|---|---|

_____________ யைச் சூழப் பசுமையான மரங்கள் காணப்படுகின்றன. மாதவன் உயரமான ஒரு மரத்தில் _____________ இருந்து நீர்நிலையின் அழகைக் கண்டு வியந்தான். நீர்நிலையின் ஒரு _____________ யில் வாத்துகள் நீந்திக் கொண்டிருந்தன. நீர் நிலையில் மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. அவ்வேளை _____________ வானவெளியில் சிறகடித்துப் _____________ பறவைகள் மீன்களைக் கொத்தித் தின்பதற்காக வந்து கொண்டிருந்தன.

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. ஒழுக்கம் உடைமை குடிமை ________________

   இழிந்த பிறப்பாய் விடும்

   ( ஒழுக்கம், இழுக்கம், ஆக்கம் )

2. நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்

   என்றும் ________________ தரும்.

   ( இடும்பை, பெருமை, மேன்மை )

புள்ளிகள் 05


TEDC -FR

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ தமிழர் வாழ்வியலில் ஆரியம் ஊடுருவல்
- ✸ தென்றல் வரவு
- ✸ முயற்சி திருவினையாக்கும்
- ✸ புலம்பெயர் நாட்டில் தமிழ்க்கல்வி

புள்ளிகள் 15

TEDC -FR TEDC -FR



TEDC -FR